வரவில்லை. என்றாலும், அதைத் தெரிந்து, அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியுமானால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தியாவிலே எந்தெந்த மாநிலங்கள் தன்னுடைய சொந்தப் பொறுப்பிலே விமான சர்வீசுகள் நடத்துகின்றன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? அதுபோல், இந்த விமான தளம் அமைக்க வேண்டுமென்று தமிழக அரசுக்கு பல்வேறு தனியார் நிறுவனங்கள் சார்பிலே, பல்வேறு கழகங்கள் சார்பிலே ஆலோசனைகள் ஏதாவது கூறப்பட்டிருக்கிறதா அல்லது அதற்கான கருத்து அரசால் வேண்டப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களில் யார், யார் நடத்துகிறார்கள் என்ற விவரம் என்னிடம் இலை. அவ்வாறு அமைப்புகளை யோசனை கேட்கக்கூடிய திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று கேட்டார்கள். அரசாங்கமே இப்படிப்பட்ட திட்டம் ஒன்றை மனதிலே வைத்திருக்கிறபோது, தேவையென்றால் மற்றவர்களைக் கேட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேக்கல் முடியில் இருந்து துரித பேருந்து.

*வினா எண் 468— திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேக்கல் முடியிலிருந்து வால்பாறை, பொள்ளாச்சி வழியாக மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரிக்கு துரித பேருந்து விடும் உத்தேசம் அரசிற்கு உள்ளதா ?

(ஆ) ஆம் ஏனில், எப்போது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1981 மார்ச் 24]

[முற்பகல் 10·20]

திரு. ஏ. டி. கருப்பையா : துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியான சேக்கல்முடி, வால்பாறை பகுதிகளில் ஏராளமாக அணைக்கட்டு வேலை நடந்து கொண்டிருக்கின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்தப் பகுதிகளில் வேலை செய்து கொண்டிருக்கிற தோட்டத் தொழிலாளர்கள் திருநெல்வேலி, மதுரை, கன்னியாகுமரி போன்ற பகுதிகளிலிருந்து வந்தவர்கள். அவர்களுக்கு வசதியாக சேக்கல் முடியிலிருந்து கன்னியாகுமரி வரை துரித பஸ் வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் அளித்திருப்பதாகத் தெரிய வருகிறது. அவர்களின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு, என்னுடைய வேண்டுகோளையும் ஏற்றுக் கொண்டு சேக்கல் முடியிலிருந்து மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களுக்குத் துரித பஸ் விட அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் பொறுத்த வரை ஓட்ட வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கே வந்தாலும் கூட, நடைமுறையிலே இருக்கிற சிக்கல்தான் எங்களைச் செய்ய விடாமல் தடுக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேக்கல்முடியிலிருந்து, வால்பாறை வழியாகப் பேருந்து விட வேண்டுமென்று கேட்கிறார்கள். அது மலைப் பகுதி, மலைப் பகுதியில் சிறிய பேருந்துகளைத்தான் விட முடியும். இங்கு ஓடிக் கொண்டிருக்கிற திருவள்ளுவர் போக்குவரத்து பேருந்துகளை அதில் இயக்க முடியாது. அப்படி நாம் விரைவுப் பேருந்துகளை விடவேண்டுமென்று சொன்னால் சிறிய பேருந்துகளை விடுகிறபோது எண்ணிக்கை குறையும். இவைகளை இலாபகரமாக இயக்க முடியாது. இவர்கள் பொள்ளாச்சியிலிருந்து கேட்கிற இடங்களுக்கு ஏறத்தாழ 22 பேருந்துகளை 42 முறைகள் நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். பொள்ளாச்சியிலிருந்து சேக்கல் முடிக்கு பல சேரன் போக்குவரத்து பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இங்கேயிருந்து மற்ற இடங்களுக்குச் சிரமம் இல்லாமல் செல்ல வசதி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது இதை நடத்தி வைப்பதற்கு அதிகச் சிரமம் இருக்கிறது என்று சொன்னார். ரெயில்வே நிர்வாகம் 'டீ கார்டன் எக்ஸ்பிரஸ்' என்ற ஒரு எக்ஸ்பிரஸ் வண்டியை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு முக்கியமான காரணம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதிலேயே வருகிறது. திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, சேலம், கோயம்புத்தூர் போன்ற ஜில்லாக்களில் இருக்கும்படியான சாதாரண, தாழ்த்தப்பட்ட மக்கள் ஏராளமாக நீலகிரி,

வால்பாறை மலைப் பகுதி தோட்டங்களிலே இருந்து வருகிறார்கள். இவர்களுக்கு வசதியாக—சிறிய பஸ்ஸாக இருந்தாலும் பரவாயில்லை—எக்ஸ்பிரஸ் பஸ்விட என்ன கஷ்டம். இப்போது சி.டி.சி போன்ற ஸ்தாபனங்களில் பஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, அவர்களுக்கு சேசிஸ் அதிகம் கிடைத்திருக்கிற இந்த சமயத்தில் .... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாக கேட்கவும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். விட வேண்டுமென்று எங்களுக்கும் ஆசை இருக்கிறது. சிறிய பேருந்துகளை மலைப் பகுதிக்கு மட்டும்தான் இயக்கிக் கொண்டிருக்கிறோம். சிறிய பேருந்துகள் கீழே சாதாரணப் பகுதிக்கு வருகிறபோது இலாபம் இல்லாமல் ஓடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தேவையான அளவிற்கு வால்பாறை போன்ற இடங்களிலிருந்து பேருந்துகள் இருக்கின்றன. அங்கே வந்துவிட்டால் தேவையான இடங்களுக்குப் போவதற்கு ஐந்து நிமிடத்திற்கு ஒரு பேருந்து என்று இருக்கும்பொழுது நேரடியாக பஸ் வேண்டுமென்று கேட்பது எவ்வளவு பொருத்தமானது என்பதை எங்களால் உணர முடியவில்லை.

திரு. எம். ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலிருந்து கன்னியாகுமரி வரை நேரடி போக்குவரத்து வசதி தேவையென கோரிக்கையினை விடுத்திருக்கிறார்கள். வால்பாறை பகுதியில் இருக்கக்கூடிய பெரும்பகுதியான மக்கள் வெளி மாவட்டங்களிலிருந்து சேர்ந்திருக்கிற காரணத்தாலே, மேலும், இதற்கு முன்னரே பல்லவன் போக்குவரத்து கழக துரித பஸ் விடப்பட்டு, இரண்டு மாத காலம் ஓடிய பின்னாலே நிறுத்தப்பட்டது. எனவே துரித பேருந்து விடக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தாலே துரித வண்டி விடுவதற்கு அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஏற்கனவே- துரித வண்டி ஓடிக் கொண்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட தகவல் எனக்கு இல்லை. ஓடிக் கொண்டிருந்ததை 2 மாதத்தில் நிறுத்தியிருக்கிறார்கள் என்றால் மக்களைப் பழி வாங்க வேண்டும் என்பதால் அல்ல. சிக்கல் ஏற்பட்டதால் நிறுத்தியிருக்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டும். அதை மீண்டும் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1981 மார்ச் 24]

திரு. ஏ. டி. கருப்பையா: துணைத் தலைவர் அவர்களே, சேக்கல்முடியிலிருந்து கோவைக்கு எக்ஸ்பிரஸ் பஸ் ஓடிக் கொண்டிருப்பது அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும் என்று நினைக்கிறேன். சேக்கல்முடியிலிருந்து கன்னியாகுமரிக்கு விடுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

(பதில் இல்லை)

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு புதிய டிப்போ.

*வினா எண் 469— **திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடியில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்குப் புதிய டிப்போ கட்டுவதற்கான இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதா ?

(ஆ) வேலை எப்போது துவக்கும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இன்னும் இல்லை.

(ஆ) இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, வருவாய் அதிகாரிகள் இடத்தைப் பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தினிடம் ஒப்படைத்த பின்னர் வேலைகள் தொடங்கும்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்: துணைத் தலைவர் அவர்களே, போடி நகரத்திலே அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும் வருகின்ற 60 பஸ்கள் நிறுத்த வேண்டிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே விரைவாக நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அங்கே இருக்கின்ற சிக்கலைப் பார்த்துத்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. விரைவாக அரசாங்கம் செய்வதற்கு மீண்டும் அவர்களைத் துரிதப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: அரசுப் போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த டெப்போக்களில் ஒரு கழகத்தைச் சேர்ந்த டெப்போவைச் சேர்ந்த வண்டியை இன்னொரு டெப்போவிலே பழுது பார்க்க மறுக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஒரு டெப்போ வண்டி பழுது பட்டால் அதைப்